# தமிழர் கலைத்திறன்

பழந்தமிழர் கலைகளிலே சிறந்து விளங்கினர். அவற்றை ஆடற்கலை, கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என வகைப்படுத்தி நோக்கினர். ஆடற்கலை இந்நாளில் நடனம், நாட்டியம், பரதம் என அழைக்கப்படுகின்றது. இவ்வாடற்கலைபற்றிச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டள்ளது. இதில் நாட்டிய அரங்கின் அளவு பற்றியும் இசைக்கலைஞர்கள் அமர வேண்டிய இடங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஊர் மக்களுக்காக ஆடப்படுவது பொதுவியல் என்றும் வேந்தர்களுக்கும் மன்னர்களுக்குமாக ஆடப்படுவது வேத்தியல் என்றும் அழைக்கப்பட்டது.

தமிழர் கட்டிடக்கலையிலும் சிறந்து விளங்கினர். இராசராசசோழன் தஞ்சைப்பெருங்கோவிலைக் கட்டுவித்தான். அதன் கோபுரம் 216 அடி உயரம் உடையது. கருவறையிலுள்ள சிவலிங்கம் தமிழகத்திலேயே மிகப்பெரியதாகும். இக்கோவிலின் முன் மண்டபவிதானத்தில் கல்லாலான சங்கிலிகள் செதுக்கப்பட்டுள்ளமையைக் கண்டு உலகம் வியக்கின்றது. சிற்பக் கலையிலும் தமிழர்கள் திறனுடையவர்களாக விளங்கினர். நரசிம்ம பல்லவன் சிற்றூர் ஒன்றில் உள்ள குன்றுகளைச் செதுக்கிச் சிற்பக்காடாக்கினான். அவ்வூரே மாமல்லபுரம். இதுமட்டுமன்றி தமிழர்களால் கட்டப்பட்ட கோயில்கள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன. இங்குள்ள சிற்பங்கள் உயிர்ப்புடையனவாக உள்ளன.

கவின்கலைகளில் மிகவும் சிறப்புவாய்ந்தது ஓவியக்கலையாகும். பழந்தமிழர் தங்கள் வரலாற்று நினைவுகளையும் கலை வடிவங்களையும் ஓவியங்களாகப் பேணினர். பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சித்தன்னவாசல் ஓவியங்கள் மிகவும் சிறப்புடையனவாகும்.